# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.3/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முரளி | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணா ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : காசிநாகபுரம் |
| தொழில் | : -- | வட்டம் | : திருத்தணி |

**04.03.2025**

<u>பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4. தாவா சொத்தை தவிர என் அப்பா பெயரில் வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் 1 1/2 ஏக்கர் உள்ளது. அந்த 1 1/2 ஏக்கருக்கு பட்டா என் அப்பா பெயரில் உள்ளது என்றால் ஆமாம். என் அப்பா பெயரில் புல எண்.31/1ல் 1530 சதுரடியில் மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் 17க்கு 21 1/2 அடி அளவிற்கு மாடி வீடு என் அப்பா பெயரில் உள்ளது. புல எண்.29/21ல் 15 செண்ட் நிலத்தை ஜுலை மாதம் 2021ல் 15 லட்சத்திற்கு என் அப்பா விற்றார் என்றால் 10 லட்சத்திற்கு விற்றார். என் அப்பா கிரையம் செய்த ஆவணத்தில் நானும் என் அப்பாவும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் என் அண்ணனும் என் அக்காவும் கையெழுத்து செய்யவில்லை என்றால் ஆமாம்.

5. என் அண்ணன் ஏழுமலைக்கு என் அப்பா எழுதி வைத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்தில் என் அண்ணன் மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம். புல எண்.29/6ல் வாதி ஏழுமலை மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு வாதி பட்டா மாற்றி வரி செலுத்தி வருகிறார் என்றால் 3 புல எண்களுக்கு மட்டும்தான் அவர் வரி செலுத்தி வருகிறார். வழக்கு சொத்துக்கள் அனைத்திற்கும் பட்டா வாதி பெயருக்கு மாறி வாதி வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் 3 புல எண்களுக்கு மட்டும்தான் அவர் பட்டா மாற்றி

வரி செலுத்தி வருகிறார். மற்றவை கூட்டு பட்டாவில் உள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் ஏமாற்றி கையெழுத்து வாங்கியதாக நான் கூறியுள்ளதில் அது குறித்து அந்த தேதியில் நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஆனால் அது இங்கு வராது என்று புகாரை எடுக்கவில்லை.

6. நான் கொடுத்த புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்து தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் ஏமாற்றி கையெழுத்து வாங்கியதாக சொல்லுவதே பொய் என்றாலும் சரியல்ல. என் அண்ணனிடம் கேட்டபோது அடித்து கண்ணில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளதில் அது எந்த தேதி என்றால் தேதி ஞாபகமில்லை. ஆனால் இரவு 10.30, 11 மணி இருக்கும். இந்த புகாரை விசாரணைக்கு எடுத்து கொண்டார்களா என்றால் எடுத்து கொண்டார்கள். காலையில் விசாரணைக்கு வர சொன்னார்கள். எனக்கு பிறவியிலேயே கண் கோளாறு உள்ளது என்றால் எனக்கு பிறவியிலேயே கருட பார்வை (மாறுகண்) ஆகும்.

7. நான் கொடுத்த புகாரை காவல்நிலையத்தில் எடுத்து கொண்டார்களா என்றால் ஆமாம். விசாரித்து இருவரையும் சமாதனப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். எனக்கு பிறவியிலேயே இடது கண் பார்வை கோளாறு என்றாலும் வாதி அடித்ததாகவும் நான் புகார் கொடுத்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் அக்கா மீனாவின் பேச்சை கேட்டு கொண்டு வாதிக்கு எழுதி கொடுத்த இனாம் செட்டில்மெண்டை ரத்து செய்ய பொய்யாக இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகோரியப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)